யோகாஸன ஆலய விஜயம்

மலர் 31	காளயுக்தி ஆண்டு மார்கழித் திங்கள் December—1978	இதழ் 12

யோகிகள் கால்கட்டி ஒண்மதி ஆனந்தப்
போத அமுதைப் பொசித்தவர் எண்சித்தி
யோகியர் கள்ளுண்டு மூடராய் மோகமுற்று
ஆகும் மதத்தால் அறிவழிந் தாரே

இறைவனருளால் தவம் செய்யும் யோகிகள் உணர்வை நடுநாடி வழியாகச் செலுத்தி புருவ நடுவாகிய மதி மண்டலத்தினின்றும் பேரின்ப மெனும் அமிழ்தை அருந்துவர். அவர் எட்டு வகையான சித்திகளையும் எய்துவர். ஏனையோர் அறிவை மயக்கும் கள்ளினைக் குடித்து மூடராகி மேலும் கள் மயக்கத்தால் மதங்கொண்டு அறிவை இழப்பர்.

—திருமூலர்.

சந்தா விபரம்	உள்நாடு	சிலோன்	வெளிநாடு (கப்பல்)	விமானம்
ஆண்டு சந்தா	ரூ. 4—00	ரூ. 6—00	ரூ 15—00	ரூ. 30—00
ஆயுள் சந்தா	ரூ. 50—00	ரூ. 80—00	ரூ. 150—00	ரூ. 300—00
தனிப்பிரதி	40 காசு	50 காசு	ரூ. 1—25	ரூ. 2—00

பொன் மொழிகள்

மூலமாகிய ஒன்றைத் தெரிந்துகொள்; பிறகு உனக்கு எல்லாந் தெரியவரும். ஒன்று என்ற இலக்கத்தின் பின் பூஜ்யங்களைச் சேர்த்தால் அது நூருகவும், ஆயிரமாகவும் ஆகின்றது ஆனல் அந்த ஒன்று என்னும் இலக்கத்தை அழித்துவிட்டால் மிகுந்திருப்பனவற்றுக்கு மதிப்பில்லை. ஒன்றினல் தான் பலவற்றுக்கு யோக்கியதை யுண்டாகின்றது. முதலில் ஒன்று, பின்னர் பல: முதலில் ஈசுவரன், பின்னர் ஜீவனும் உலகமும்.

ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர்

ஒவ்வொரு மனிதனின் உள்ளத்திலும் உண்மை இருக்கிறது. அதைத் தேடிக் கண்டு பிடிக்கவேண்டும். தான் கண்ட உண்மை தனக்கு எப்படி வழி காட்டுகிறதோ, அப்படியே ஒருவன் நடக்கவேண்டும் என்று மற்றவர்களைக் கட்டாயப்படுத்த யாருக்கும் உரிமை கிடையாது.

மகாத்மா காந்தியடிகள்.

உயர்திரு கோ. மு. சுவாமி அவர்கள் பொன்மொழி

இறைவனை வாழ்த்த வாழ்த்த மனம் பரிசுத்தமாகிறது மனம் பரிசுத்த மாவதால் அமைதி உண்டாகிறது. அமைதியில் இன்பம் உண்டாகிறது. ஒவ்வொருவரும் இன்பமாக இருக்க இடைவிடாது இறைவன் நாமத்தைச் செபித்துக் கொண்டே இருக்கவேண்டும்.

திருமதி சாவித்திரி செல்வராஜன்

பௌர்ணமி வகுப்பு

13—1—1979 சனிக்கிழமை இரவு 7 மணிக்குக் கீழ்க்காணும் இடங்களில் வகுப்பு நடைபெறும்

1. அருள்மிகு மன்ஞர்சாமி கோவில், மன்ஞர்சாமி கோவில் தெரு இராயபுரம், சென்னை-600 013.
2. சுந்தர விநாயகர் கோவில், சின்னநத்தம், செங்கல்பட்டு.
3. திரு. தேவராஜ் இல்லம், 17, வள்ளுவன் தெரு, புரசைவாக்கம், சென்னை-600 084.

வேள்விப் பயிற்சி வகுப்பு

பிரதி மாதம் இரண்டாம் ஞாயிறன்று சென்னை, சூளைமேடு வன்னியர் தெரு 7, யோகாசன ஆலயத்திலும், மூன்ரும் ஞாயிறன்று செங்கல்பட்டு, பெரியநத்தம், பெரியரத்தினத் தெரு, எண் 3 இல்லத்திலும், கடைசி ஞாயிற்றுக்கிழமைகளில் புரசைவாக்கம், வெள்ளாளத் தெரு. (ஸ்டுடியோ சோமனுத்) எண் 5லும், காலை 10 மணிக்கு வேள்விப் பயிற்சி நடைபெறும், அன்பர்கள் கலந்து பயிற்சி பெறுக!

யோகாசன ஆலய தலைவர் உயர்திரு கோ. மு, சுவாமி அவர்களுடன் கடிதத் தொடர்பு கொள்வோர், எண் 85, தொப்பை முதலி தெரு, இராயபுரம், சென்னை-600 013 என்ற முகவரிக்கு எழுதவும்.

—ஆசிரியர்,

மகரிஷி தாயுமானவர்

ஆசையெனும்
திரு. கோ. மு. சுவாமி அவர்கள்
நிகழ்த்திய உரை விளக்கம்.

முன்னிலைச்சுட் டொழிதியெனப் பல்காலு நெஞ்சே! நான்
மொழிந்தே னே; நின்
றன்னிலையைக் காட்டாதே, என்னை யொன்ருச் சூட்டாதே
சரணுன் போந்த
அந்நிலையே நிலை; அந்த நிலையிலே சித்திமுத்தி
யனைத்துந் தோன்றும்;
நன்னிலையீ தன்றியில்லை; சுகமென்றே சுகர்முதலோர்
நாடி ஞரே.

பதவுரை

நெஞ்சே-மனமே!, முன்னிலை சுட்டு-முன்னிலையாகச் சுட்டுதலை, ஒழிதி என-ஒழிவாயாகவென்று, பல்காலும்-பலதரமும், நான்-நான், மொழிந்தேனே-சொன்னேனே; நின் றன்-உன்னுடைய, நிலையை-நிலைமையினை, காட்டாது-காட்டாமலும், என்னை-என்னை, ஒன்று ஆ-ஒரு பொருளாக, சூட்டாது-வையாமலும், நான்-நான், சரண் போந்த-அடைக்கலம் புகுந்த, அ நிலையே-அந்த நிலையே, நிலை-நன்னிலையாகும்; அந்த நிலையிலே-அந் நிலையிற்ருனே, சித்தி-சித்திகளும், முத்தி-மோட்சமும், அனைத்தும்-மற்ற யாவும், தோன்றும்-உண்டாகும்; ஈது அன்றி-இஃதன்றி, நன்னிலை இல்லை-நல்ல நிலையில்லை; சுகம் என்றே-இதுவே இன்பநிலையம் என்று, சுகர் முதலோர் நாடினர்-சுகர் முதலிய பெரியோர்கள் இந்த நிலையை விரும்பினுர்கள், என்க.

கருத்துரை

மனமே! முன்னிலையாகச் சுட்டுதலை ஒழிவாயாக! என்று பல முறை நான் சொன்னேனே; உன்னுடைய நிலைமையினைக் காட்டாமலும், என்னை ஒரு பொருளாக வையாமலும் நான் அடைக்கலம் புகுந்த

அந்த நிலையே நன்னிலையாகும். அந் நிலையில்தானே சித்திகளும் முத்தியும் மற்ற யாவும் உண்டாகும்! இதுவன்றி நன்னிலை வேறு இல்லை. இதுவே இன்ப வீடு என்று சுகர் முதலான பெரியோர்கள் விரும்பினுர்கள் என்பதாகும்.

விரிவுரை

அளப்பரும் ஆனந்த சோதியாக விளங்கும் பரம்பொருளை விளித்த தாயுமான சுவாமிகள், பேரின்ப வீட்டில் எனை இருத்திவைப்பது எக்காலம்? என்று முன் பாடலில் கூறினர். இப்பாடலில், சுகர் முதலான பிரம்ம ஞானியர் நாடிநின்ற தன்மை, முன்னிலை, படர்க்கை எனும் சுட்டொழிந்த நன்னிலையில் நான் சரணடைந்தேன் என்கிருர்.

சோதி அல்லது உள்ளொளியைக் காண்பது யாங்ஙனம்? எனில், அவரவர் செய்யும் ஆத்ம சாதனையில் முழு நம்பிக்கை உண்டானு லாகும். விளக்கின்றி, எண்ணெயின்றி, தண்ணீருமின்றி எரியப்படும் விளக்காகும் இது! இவ்வனுபவ நிலை பெறுவதற்குமுன் காணும் காட்சிகளைச் சாதகன் தள்ளிக்கொண்டே செல்லல் வேண்டும், முதலில் மூர்த்தி தலங்களை வலம்வரச் செய்தும், தீர்த்தங்களில் மூழ்கச் செய்தும், காலப் போக்கில் மரங்களையும் சுற்றிவரச் செய்து படிப்படியாக பக்தி நெறியை மக்களுக்குப் போதித்தனர் நம் முன்னேர். பின்னர் ஒவ்வொரு படியாகக் கொண்டு சென்று ஆத்ம சாதனைக்கு ஆளாக்கினர். அச் சாதனையிலும் உள்ளூரக் காணும் காட்சிகளை இதுவன்று! இதுவன்று! என அகற்றிக்கொண்டே சென்று, நினைப்பு, மறப்பற்ற, அஃதாவது சிந்தனையற்ற நிலையைப் போதித்தனர். காண்பான், காட்சி, காணப்படும் பொருள் எனும் மூவிதத் தன்மையற்ற நிலையே இறுதியான நிலை. இதனைத் தாயுமான அடிகளார்,

"உள்ளதும் இல்லதும் ஆகி—முன்
உணர்வதுவாய்உன் உளங்கண்ட தெல்லாம்
தள்ளெனச் சொல்லிஎன் ஐயன்—என்னைத்
தானுக்கிக்கொண்ட சமர்த்தைப்பார் தோழி"

என்று உள்ளங்கை நெல்லியங்கனியென தெள்ளத் தெளியக் கூறுகின்ருர்.

இங்ஙனம் ஒவ்வொரு நிலையிலுள்ளவரையும் அடுத்த நிலைக்கு மாற்ற வேண்டுமேயன்றி குற்றம் பாராட்டலாகாது. கனியை உண்பதற்குத் தோலையும், கொட்டையையும் அகற்றுவது போன்று ஞானமெனும் அருட் கனியை உண்பதற்கு முன்னுள்ள நிலைகளைக் கடக்க வேண்டும். இந்நிலையைப் போதிப்பவர் குருமார்கள் ஆவர். அவர்களுக்குக் காணிக்கை நம்மால் யாது கொடுத்து ஈடுசெய்ய வியலும்? அனுபவம் எனும் சிந்தாமணியைக் கொடுப்பதுதான் அதற்கீடாகும்.

இம் மணியை மறைத்து நிற்பது மனமேயாதலால் மனதிற்குப் போதனை செய்தல் வேண்டும். வேதங்களே மனதிற்கு உரைப்பவை தான். "நிஜானந்த போதம்" எனும் நூலில் மனதிற்குப் போதிப்பதாகவே கூறப்பட்டுள்ளது காண்க! தாயுமானுரும் இப் பாடலில், "முன்னிலைச் சுட்டொழிதி யெனப் பல்காலு நெஞ்சே! நான் மொழிந்தேனே" என மனதுக்குப் போதிக்கின்ருர். மனமெனும் மனைவி அறிவெனும் கணவனுக்குக் கட்டுப்பட வேண்டும். அப்போதுதான்

ஆன்மீக வாழ்வு சிறப்புறும். அருட்பிரகாச வள்ளலார் தன்னுடைய ஆன்மீக வாழ்க்கையைச் "சந்ததம் எனக்குமகிழ் தந்தையுண்டு" என்று தொடங்கும் பாடலில் விவரித்துக் கூறுகின்றார். அப் பாடலின் கருத்தாவது; செஞ்சடைக் கடவுளே! எக்காலத்தும் எனக்கு மகிழ்ச்சியையே கொடுக்கும் அம்மையும் அப்பருமாக நீவிர் இருக்கின்றீர். எனக்குச் சுற்றத்தினராக நின்னடியார் உளர். நண்பனாக சாந்தம் இருக்கின்றது. நிராசை எனும் கற்புள்ள மனைவி இருக்கின்றாள். எங்களுக்குப் பிறந்த அறிவாகிய அருமைப் புதல்வன் இருக்கின்றான். இரவும் பகலுமற்ற ஏகாந்த இடமிருக்கின்றது. அருள் எனும் பொருள் உண்டு. மற்றும் பேரின்பமெனும் போகங்கள் இருக்கின்றன. காத்துக் கொள்வதற்குத் திருநீறாகிய கவசமிருக்கின்றது. அதனோடு ஐந்தெழுத்துகளாகிய மந்திரப் படையும் இருக்கின்றது. இவையனைத்தும் சேர்ந்த சிவகதி எனப்படும் பெரிய வாழ்வு அமைந்திருக்க எனக்கொரு தாழ்வும் உண்டோ? என்கின்றனர்.

வள்ளற் பெருமான் நிராசையை மனைவியாகவும் அறிவைப் புதல்வனாகவும் கூறியுள்ளது சிந்திக்கற்பாலது. அறிவின் வழி வாராத மனதை அச்சுறுத்துகின்றார் தாயுமான அடிகளார்;

வாராய்நெஞ் சேஉன்றன் துன்மார்க்கம் யாவையுங் வைத்துக்
[கட்டிங்(கு)
ஆராய் அடிக்கடிச் சுற்றுகின் றாய்உன் அவலமதிக் (கு)
ஓரா யிரம்புத்தி சொன்னாலும் ஓர்கிலை ஓகெடுவாய்
பாராய் உனைக்கொல்லு வேன் வெல்லு வேன் அருட் பங்குகொண்டே.

மனதின் வேண்டுதல் வேண்டாமையற்ற நிலையிலேயே வேதத்தின் முடிபாகிய சாந்தி (அமைதி) கிட்டும். எனவே தாயுமான அடிகளார் இப் பாடலில் மனதை விளித்து, "நின் தன்னிலையைக் காட்டாதே" என்கின்றார். மௌன சாதனை சித்திபெற்றாலொழிய மனமடங்கா! எனவே "மனமெனுங் கருவி தன்னது வழி அற்று என்னுழைக் கிடப்பத் தண்ணருள் வரமது வேண்டும்" என்றும் கேட்கின்றார்.

வேதாந்தம் எனும் நாட்டினுள் நுழைந்தால் மூன்று பிரிவுகள் செல்லும். ஒன்று; அறிவு நிலையில் தன்னிலே தானாக நிற்பது, மற்றொன்று; பல்வேறு அதிசயக் காட்சிகளைக் காண்பது; பிறிதொன்று, சக்தி சுயஞ்சோதியைக் காண்பது. இது வேதாந்தத்தின் நிறைவாகும்! முன் கூறியவை சித்திகள் உலகப் புகழ் போன்றவை தரக் கூடியன. இவற்றிற்கு ஆதாரம் பிரணவமேயாகும். பிரணவத்தைப் பிரித்தால் அகர, உகர, மகரமென மூன்றாகும். மகரமே முத்தாந்த வீதி சேர்ப்பிக்கும் முகவரியாகும். எனவே இந் நெறியினின்றும் அகலாதவாறு "என்னை ஒன்றாச் சூட்டாதே" என மனதைக் கேட்கின்றார். என்னை என்பது அறிவை யாகும்.

மனமே நான் அறிவுப் பொருள்! உன்னைவிட எனக்கே பலம் அதிகம். ஆனாலும் உன்னைச் சுமந்துகொண்டிருக்கும் சுமையாளாகச் செய்துவிட்டாய். நான் அறிவுக்கு அறிவான பரம்பொருளினிடத்தில் சரண் புகுந்திருக்கின்றேன். நீ உன் நிலைமையினைக் காட்டினால் என்னால் சரண்புகவியலாது; நீ எனக்குத் துணை நிற்க வேண்டும் என மனதை தன் வழிக்குப் பக்குவப்படுத்துகின்றார்.

"இமையளவு போதை" என்ற பாடலில் சுவாமிகள், "சுமை எடுமின் என்றுதான் சும்மாடுமாய் எமைச் சுமையாளுமாக்கி நாளும் துர்ப்புத்தி பண்ணி, உள நற்புத்தி யாவையும் சூறையிட்டு இந்த்ரசாலம் அமைய ஒரு கூத்தும் சமைந்தாடும் மனமாயை அம்மம்ம! வெல்ல எளிதோ" என்று மனதின் வலிமையைக் கண்டு அஞ்சுகின்ருர்.

சரணடைதல் என்பது யாதெனில்? அறிவை அறிந்து அவ்வறிவால் அறியப்படுகின்ற அனுபவம் எதுவோ? அதற்கே தன்னை (அறிவை) ஒட்புவித்தலாகும். இதனை அருணகிரியார், "சரணகமலாலயத்தை அரை நிமிட நேரமட்டில் தவமுறை தியானம் வைக்க அறியாத சடன், கசடன், மூடன், மட்டி" என தன்னையே நொந்து கொள்கின்ருர். ஆரம்பத்தில் ஒவ்வொருவரும் சத்சங்கத்தில் சரண் புகுதல் வேண்டும். அடுத்தது அருளாளர்களின் நூல்களுள் ஒன்றில் தேர்ந்து சரண் அடைதல் வேண்டும். பின்னர் ஐந்தெழுத்திலும், அதனை விளங்க வைத்து அனுபவ நிலையை சுட்டிக்காட்டும் குருவினிடத்திலும் சரண் புக வேண்டும். அன்றி மேற்கூறிய அனுபவத்தில் சரணடைய இயலாது.

மேலும் சுவாமிகள் "வானுதி பூதமாய்" எனும் பாடலில், "நானுகி நின்றவனும் நீயாகி நின்றிட.வும்" என்று கூறுகின்ற நிலையில் சரண் புகாமல், நான் நான் எனும் அகந்தையால் விகாரப்பட்டு அலைந்தால் அது என் துரதருஷ்டமேயாகும். அதனை வெல்லுதல் எனக்கு எளிதாகுமோ? பகல் நேரம் கழியுமுன்னரே படுக்கையில் தூங்குபவனைப் போல கிடப்பவனை எழுப்புதல் என்பது இயலுமோ? அ" னுக்கு எந்த நெறியைப் போதிப்பது? இத்தகைய நிலையினை அறிந்தும் அறியாதவனுக இருக்கின்ற என் நிலைமை என்னே அநியாயம்! இதனை யாரிடத்தில் எடுத்து மொழிவேன்? என தன்னையே நொந்து கொள்கின்ருர்.

பொய்த் துகிலின் உண்மையை நாம் சற்றே உணர்தல் வேண்டும். மகாவிஷ்ணு திருப்பாற்கடலில் அரவணைமீது எக்காலத்தும் பள்ளி கொண்டிருப்பதாக சித்தரித்துக் காண்பிக்கப்பட்டுள்ளது. இதன் உட்பொருளைத் திருமூலர் விளக்குகின்ருர்.

தூங்கிக்கண் டார்சிவ லோகமும் தம்முள்ளே
தூங்கிக்கண் டார்சிவ யோகமும் தம்முள்ளே
தூங்கிக்கண் டார்சிவ போகமும் தம்முள்ளே
தூங்கிக்கண் டார்நிலை சொல்வதெவ் வாறே.

சோம்பல் காரணமாக தூங்குகின்ற தூக்கம் உலகாயதர் தூக்கம்! தன் செயலற்றுச் சிவச் செயலாகத் தூங்குவது சிவத் தூக்கம் இந்த நிலை வேதங்களாலும் கூறவொண்ணுத உயர்ந்த நிலை! இத் தூக்கம் தூங்குகின்ற இடம் உண்மைத் தூவெளியாகிய சிவவெளியாகும். அத்தகையோர் பேரின்பம் நுகர்ந்து கிடப்பதும் அச் சிவவெளியிலேயாகும். வேதங்களும் காணுத சிவவெளியில் திருவடி யுணர்வொடு ஒன்றியிருப்பர் எனுங் கருத்தைப் பின்வரும் பாடலில் கூறுகின்ருர்;

சோம்பர் இருப்பது சுத்த வெளியிலே
சோம்பர் கிடப்பதுஞ் சுத்த வெளியிலே
சோம்பர் உணர்வு சுருதி முடிந்திடஞ்
சோம்பர்கண் டாரச் சுருதிக்கண் தூக்கமே.

மேற்கூறிய மகர வீதியில் காண்பது சிந்தாமணியாகிய மெய்ப் பொருளாகும். "எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு" என்பது தமிழ் மறை. "சித்தமறியாதபடி சித்தத்தில் நின்றிலங்கு திவ்ய தேசோமயத்தை" என்பர் தாயுமானுர். இவ்வனுபவத்திற்கு மாணிக்கத்தை உவமை கூறுவர். கோவில்களிலுள்ள மூர்த்திகளில் மாணிக்கக் கற்களைப் பொருத்தியுள்ள தன் நோக்கமும் இதுவேயாம். பெறற்கரிய இம் மாணிக்கத்தைக் குருமார்களின் வாயிலாகப் பெற்ற பின்பு அதனைப் பாதுகாப்பாகவும் தூய்மையுடனும் வைத்திருப்பது மாணக்கர் கடமையல்லவா ?

இவ்வண்ணம் செல்வக் காலத்தும் அல்லற் காலத்து நினைவுகளை மறவாது பெட்டியில் வைத்துப் போற்றிய தாராவின் கதையினைக் காண்போம்.

பாரசீக நாட்டில் தாரா என்பவர் ஏழ்மைக் குடியில் பிறந்து வளர்ந்து ஆடு மேய்ப்பவராகப் பணிபுரிந்து வந்தார். உலகப் புகழ் பரவும் பல பெரியார்களின் முற்கால வாழ்க்கை ஏழ்மை நிலைமையிலிருந்தமையை வரலாறுகள் பகர்கின்றன. தாரா உலகப் பொருளில் ஏழ்மையானுலும் அறிவுப் பொருளில் அளவற்ற செல்வந்தராகவே இருந்தார். அவருடைய சொல்லும் செயலும் பலருக்குப் பயன்பட்டதோடு சிந்தனைக்கும் விருந்தாக அமைந்தன. அந்நாட்டு மன்னன் தாராவின் அறிவாற்றலைப் போற்றியவனுய்த் தன் அரண்மனையில் நல்லதொரு இடமளித்தான. நாளடைவில் தாராவுக்கு தன் அமைச்சரவையில் முதன்மையான பதவியை அளித்தான். ஆடு மேய்த்துவந்த தாரா இப்போது அரசவையில் முதலமைச்சரானுர். எனினும் அடக்கம், அன்பு, செயல்களில் சற்றேனும் அகந்தை தலையெடுக்கவில்லை.

அரசவையில் கழுகுக் கண்களையுடைய சிலர் தாராவின் உயர்வு கண்டு பொறுக்கலாற்ருது பொங்கினர். தாராவை எப்படியும் மன்னன் மனத்தினின்றும் அகற்றிவிட வேண்டும் என்று திட்டங்கள் பல தீட்டினர். மனிதனுக்கென்றே படைக்கப்பட்ட குணங்கள் பத்தும இவர்களை மட்டும விட்டுவிடுமா என்ன? இத்தகைய தீய குணங்களை அகற்ற வேண்டும் என்றல்லவோ சூர சம்மாரம், இராவண சமமாரம் போன்ற புராண வரலாறுகளைப் படைத்தனர் முன்னேர்?

தாராவிடமுள்ள குறைபாடுகள் என்னென்னவென்று ஆராயத் தலைப்பட்டனர். அணுவளவேனும் கண்டார்களில்லை. தாரா எங்கெங்குச் செல்கின்ருர; என்னென்ன செயல் புரிகின்ருர் என்றெல்லாம் கண்காணித்து வந்தனர். ஒரு குற்றமும் காண இயலவில்லை, ஆனுல் புரிந்துகொள்ளவியலாத ஒரு செயலை மட்டும் தாராவிடம் கண்டனர். அதை வைத்து மன்னனிடம் தாராவின் மீது பழிசுமத்தி விரட்டிவிடலாம என்ற முடிவுக்கு வந்தனர். தாரா எங்கு சென்ருலும் ஒரு பெட்டியைத் தனனுடனேயே கொண்டு செல்வார். யாருமற்ற தனித்த வேளையில் பூட்டைத் திறந்து பெட்டியிலுள்ளவற்றைப் பார்ப்பார். சற்றுநேரம் சிந்தனையிலாழ்வார், பிறகு எப்போதுமபோல பூட்டி வைத்து விடுவார்.

இங்ஙனம் மனமெனும் பெட்டியைத் திறந்து பார்ப்பது ஆன்ம சாதகரின் செயல்!

பூட்டைத் திறப்பதுங் கையா லேமனப்
பூட்டை திறப்பது மெய்யாலே
வீட்டைத் திறக்க முடியா மல்விட்ட
விதியி தென்கிறுர் ஞானப் பெண்ணே

என்பது ஞான கும்மி எனும் சித்தர் பாடல். யாருமில்லா வேளையில் தாரா பெட்டியைத் திறந்து பார்ப்பதுபோன்று சாதகரும் சித்த விருத்திகள் எனப்படும் எண்ணங்களற்ற நிலையில் அரிய பொருளைக் காண்பர்! "ஆருமில்லா வேளையிலே குத்துவிளக்கேற்றி என் கண்ணம்மா கோலமிட்டுப் பாரேனே" என்பார் அழுகணி சித்தர்.

இங்ஙனம் தாரா பெட்டியைக் கூடவே கொண்டு செல்வதைப் பொருமை நெஞ்சங் கொண்டவர்கள் அரசனிடம் மெள்ள தாராவைப் பற்றி அவதூராக எடுத்துச் சொல்லினர். அரசனே தாராவை மிக உயர்வாகவும் கண்ணுக்குக் கண்ணுகவும் போற்றி வருகின்றுர். ஆதலினுல் அவர்கள் கூறும் வார்த்தைகளைச் சற்றேனும் செவி சாய்த்தாரில்லை. "எறும்பூரக் கல்லுந் தேயும்," "அடிமேல் அடியடித்தால் அம்மியும் நகரும்" என்ற பழமொழிக்கிணங்க கெடுமதி படைத்தவர்கள் மேலும் மேலும் தாராவைப்பற்றி சமயம் வாய்த்தபோதெல்லாம் அவதூறுகளைக் கூறி மன்னன் மனதைச் சற்றே கலக்கமடையச் செய்தனர்.

பொருமை என்பது உலகில், கற்றவர் கல்லாதவர் ஏழை பணக்காரர் ஆண் பெண் என்ற பேதமின்றி எல்லோரிடமும் குடிகொண்டுள்ள குணமாகும். தேவர்களையும் அது விட்டுவைக்கவில்லை என்பதைப் புராண வாயிலாக அறிகின்றேம். சத்சங்க தொடர்புகொண்டு ஆன்ம சாதனையில் ஈடுபட்டால் இதனை ஒருவாறு அகற்றலாம்.

மன்னனுக்கு அவர்களது கூற்றில் முழு நம்பிக்கை ஏற்படவில்லையாயினும் ஒருநாள் சோதித்துத்தான் பார்த்துவிடுவோமே என்று துணிந்தார்! "பொய்யன் இவன் என்றுமெள்ளப் போதிப்பார் சொல் கேட்டுக் கைவிடவும் வேண்டாமென் கண்ணே பராபரமே" என்று வேண்டுவார் தாயுமானுர். ஒருநாள் இரவு நேரத்தில் தாரா தங்கியிருந்த இடம் நோக்கி காவலருடன் சென்றுர் மன்னன். மன்னரின் வருகை தாராவுக்கு வியப்பாக இருந்தது! பணிவோடு வரவேற்றுர். மன்னன் தாராவின் அறையைச் சுற்றுமுற்றும் பார்த்தார். வஞ்சகர்கள் கூறியவாறே பூட்டப்பட்ட பெட்டி ஒன்று இருக்கக் கண்டார்! தாரா! அந்தப் பெட்டியினுள் இருப்பது என்னவென்று நான் பார்க்கலாமா? என்றுர். மறுமொழி பகராத தாரா பெட்டியைத் திறந்தார். மன்னனுக்கு ஏமாற்றம் ஒருபுறம்; புரியாத புதிர் மறுபுறம்! அழுக்கடைந்து கிழிந்துபோன ஆடையே அப் பெட்டியினுள் இருந்தது! தாரா! இதன் உண்மையை நான் தெரிந்துகொள்ளலாமா? என்றுர் தழுதழுத்தக் குரலில்.

"ஏழ்மையில் கிடந்த எனக்கு ஏறுபோல வாழ்வளித்த மன்னர் பெருமானே! பதவியும் போகமும் கிடைத்ததும் எங்கே அகந்தை என்னை ஆட்கொண்டுவிடுமோ! என்று அஞ்சிய நான், ஆடு மேய்ப்பவனுக இருந்தபோது உடுத்திருந்த ஆடைகளை இப் பெட்டியில் வைத்து நாள்தோறும் பார்த்துப் பார்த்துப் பழைய நிலையை நினைவுக்குக் கொண்டு வருவேன்" என்றுர் பணிவாக. மன்னனின் கண்கள்

குளமாயின. இத்தன்மை வாய்ந்த உயர்நோக்குடையவரையும் வஞ்ச நெஞ்சினர்கள் துன்புறச் செய்ய நினைந்தனரே என வருந்தினுன். தாராவைக் கட்டித் தழுவிக்கொண்ட மன்னன் முன்னிலும் மேலாக அன்பு பாராட்டினுர்.

வாழ்வில் எவ்வளவுதான் செல்வாக்கு உயர்ந்தாலும் முன்னுள்களின் நிலைகளையும் நட்புரிமைகளையும் மறக்கலாகா என்பதை கண்ணபிரான் குசேலர் நட்பினுல் அறிகின்ருேம். குசேலர் வறுமை காரணமாக அவரின் மனைவியின் வேண்டுகோளினுல் கண்ணனைக் காண துவாரகை சென்ருர். மிக அழுக்கடைந்த கிழிந்த ஆடையோடு ஏழ்மையான உருவத்தில் தன்னைக் காண வந்தவரைக் கண்ணன் அன்போடு வரவேற்று உபசரித்து, சிறுவயதில் கல்வி பயின்றபோது நிகழ்ந்த நிகழ்ச்சிகளையெல்லாம் நினைவு கூர்ந்து அளவளாவினர். இது வன்ருே சான்ருேரின் தன்மை?

இத்தன்மை போலவே சாதகரும் தாம் மௌனப் பெட்டகத்தில் வைத்த பொருளைச் சதாகாலமும் திறந்து திறந்து பார்த்தவண்ணமிருப்பர்.

"வானமெல்லாங் கொண்ட மௌனமணிப் பெட்டகத்துக்(கு)
ஆனபணி யான அணியே பராபரமே" என்பர் தாயுமானுர்.

அம் மௌனமணிப் பெட்டகத்திலுள்ள அரிய பொருளைச் சரணடைந்த தாயுமான அடிகளார், "அந்நிலையே நிலை அந்த நிலையிலே சித்தி முத்தி அனைத்துந் தோன்றும்; நன்னிலை ஈதன்றி இல்லை" என்று இப் பாடலில் உறுதியுடன் அறுதியிட்டுக் கூறுகின்ருர்.

அஃதாவது உணர்வு பிரம்மப் பொருளில் சரண் புகுந்தால் "ஆரார் எனக்கு என்ன போதித்தும் என்ன? என் அறிவினை மயக்க வசமோ?" என்ற உறுதி ஏற்படும். அந்த நிலையில் சித்திமுத்திகள் கூடும்! முழுமுதற் கடவுள் என்று போற்றப்படும் விநாயகப் பெருமானுக்கு சித்தி, முத்தி எனும் மனைவியர் இருப்பதாகப் புராணம் கூறுவது இக் கருத்துப்பற்றியதேயாம். சித்தி முத்திகளை யளிக்கவல்லவர் நமக்குத் தாயாகவும் இறைவனுக்கு மனைவியாகவும் உருவகப்படுத்தப்பட்டுள்ளது. அடிகளார் திருவானைக்காவில் குடிகொண்டுள்ள அகிலாண்ட நாயகியாகிய அம்மையைப் பாடுகின்ருர்;

"பட்ட வர்த்தனர் பராவு சக்ரதர
பாக்ய மானசுக யோகமும்
பார காவிய கவித்வ நான்மறை
பராய ணஞ்செய்மதி யூகமும்
அட்ட சித்தியும்நல் அன்ப ருக்கருள
விருது கட்டியபொன் அன்னமே
அண்ட கோடிபுகழ் காவை வாழும்அகி
லாண்ட நாயகிஎன் அம்மையே"

சிவன் சரண் புகுந்த நிலையில், "தனை என்று மறந்திருப்ப அருள் வடி வானதுமேல் தட்டி எழுந்திருக்கும் இன்பம் தன்மயமே அதுவாம் வினை யொன்றுமில்லை; அந்த இன்பம் எனும் நிலையம் பெற்ருரே பிறவாமை பெற்ருர்" எனும் நிலையினை தாயுமான அடிகள் தெளிந்து கூறுகின்ருர்.

எனவே இந்நிலையன்றி வேறு நன்னிலை இல்லையென நாடிச் சென்றவர்கள் சுகர் முதலான ஞானியர் ஆவர், இதனைக் குறிப்பிட்ட அடிகளார் இப் பாடலின் இறுதியில் "நன்னிலை ஈதன்றி இல்லை; சுகமென்றே சுகர் முதலோர் நாடினுரே" எனக் கூறியுள்ளார். சுகர் பிரம்ம ஞானியாவார்! எனவே அவரை முதன்மையாக வைத்து சுகர் முதலான அளவற்ற ஞானிகள் நாடி நின்ருர்கள் என்றனர்.

(9ம் பக்கம்)

WINGS OF DIVINE WISDOM

by YOGI SIVALINGAM—U. S. A.

Do continually spiritual practice and it will open your Spirit with Knowing the Reality.

Don't waste each day or minute for spending mindway. Control the emotions and turn back to do the Lords name

Repeat it (the mantra or the Lord's name) countless times and be free from the thoughts of world.

All the universe becomes a great emptiness,
All the humans become an unwandering list,
All the enjoyment-life becomes a worthyful bondage,
All the wandering people become emptiness curiosity,
All the desire people become unsuccess peoples,
Accommodate is a golden gate for who seeks the Truth,
Pray and repeat the Lord's name; even to a naughty or unworthy He will give great success, and all are His brothers and sisters,
Faith, Trust, Belief, Guru and God are One. *

Wake up earlier, Walk up several steps,
Wake up your good thoughts, Walk up many goods,
Wake up good creations, Walk up Divines,
Wake up with Yoga, Walk up Heart divines,
Wake up with nostril juices Walk up with nadis,
Wake up with Third-eyes, Walk up Sushumnas,
Wake up the God-heads. Walk up with Gurus,
Wake up with Yogasana friends, Walk up with practice,
Wake up with YOU, Walk up Divine-glory,
Wake up the Divinations, Wake up with GOALS.
Wake up the Mantras, Walk up with JOYS,
Wake up nothingless, Walk up with it.
Wake up desireless, Walk up with it,
Wake up every morning, Walk up as it is,
Wake up open mind, Walk up with it.
Wake up with good-mind-friends, Walk up with the days.
Wake up naturally, Walk up vigorously. *

கார்த்திகைப் பௌர்ணமி தீப வழிபாடு



14—12—78 வியாழன் இரவு 7 மணிக்குச் சென்னை வண்ணையம்பதி நல்லதம்பி சேதுராமன் திருமண மண்டபத்தில் தீப விழா நடைபெற்றது.

யோகாசன ஆலய தலைவர் உயர்திரு கோ. மு. சுவாமி அவர்கள் திருவிளக்கேற்றி விழாவைத் தொடங்கிவைத்தனர். தியான வகுப்புச் செயலர் திரு. A. S. ஆதிநாராயணன் அவர்கள் ஓங்காரக் கொடி ஏற்றிவைத்தனர். ''யோகாசன ஆலய விஜயம்'' மாத இதழ்களிலிருந்து மணிக் கருத்துக்களைத் தொகுத்துப் புலவர் திரு, பா. ஆழ்வார் அவர்கள் வாசித்தனர். மௌனப் பிரார்த்தனைக்குப் பின்னர் திரு. J. ஹரிஹரகிருஷ்ணன் அவர்கள் நன்றியுரை நவில கூட்டுப் பிரார்த்தனையுடன் விழா நிறைவு பெற்றது. பௌர்ணமி வகுப்புச் செயலர் திரு. J. வேங்கடேசுவரன் அனைவரையும் வரவேற்றார். விழா தொடக்கத்தில் யோ. ஆ. மகளிர் குழுவினரால் இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

ஆக அடிகளார் நெஞ்சுக்கு நீதி புகட்டும் வகையில் அறிவுறுத்துகின்றார்; ஏ மனமே! ஒன்றையும் பற்றுக்கோடாகக் கொள்ளாதே என பலமுறையும் உனக்குக் கூறியுள்ளேனே! மீண்டும் உன் நிலைமையைக் காண்பிக்காமலும் என்னைச் சுமையாளாகச் செய்யாமலும் சும்மா இரு! நான் சரணடைந்த நிலையே நல்ல நிலை. அந்நிலையில் சித்தி முத்திகள் உண்டாகும். இதைக்காட்டிலும் வேறு நல்ல நெறி இல்லையென்றே சுகர் முதலான மெய்ஞ்ஞானியர் நாடினார்கள் என இப் பாடலில் கூறியுள்ளனர்.

பதார்த்த குண போதினி

மூலிகை குணனுபவத்தை விளக்கும் சிறந்த நூல்

வைத்திய ரத்தினம் வி. பலராமய்யா, பி.ஏ., பி.எல்.
(மாவட்ட நீதிபதி ஓய்வு)

மதுர வகை

கரும்பின் சாறு :—அளவுடன் சாப்பிட பித்த ரோகத்தை விலக்கும். வாந்தி, அரோசகத்தைப் போக்கும். கெந்தகத்தைச் சுத்தி செய்யும்.

கரும்பு வெல்லம் :—அளவுக்கு மீறினுல் மதுமேகம், கபம் உண்டாகும். பித்தத்தைச் சாந்தி செய்யும்.

பனைவெல்லம் :—இதை கருப்பட்டி என்றும் சொல்வர். இது உடலுக்கு வன்மை தரும். அரோசகம், பித்த சந்நி நோய் தீரும். சுக்கு, பனை வெல்லம் சேர்த்து கஷாயமிட்டு உண்ண உடல் வலிகள் உடனே நீங்கும்.

சீனி சருக்கரை (அஸ்கா) :—பித்தத்தைத் தணிக்கும். இதையும் நெய்யையும் கலந்து உண்ண நீங்கா விக்கல் நிற்கும். அதிக அளவில் உண்டால் மதுமேகத்தை உண்டாக்கும்.

கற்கண்டு :—மதுர வகைகளில் இது சிறந்தது. உடலுக்கு வன்மை தரும், குளிர்ச்சியைத் தரும், பித்த வாந்தியை நீக்கும்.

பனங் கற்கண்டு :—இதுவும் மிகச் சிறந்தது. உஷ்ணம் நீர் சுருக்கு முதலிய நோய்களைத் தீர்க்கும்.

தேன் கற்கண்டு:—தேன் அடியில் உறையும் கற்கண்டை எடுத்து கண்களில் தீட்ட கண்களில் வளரும் துர்மாங்கிஷம் கரையும். சுக்கு, மிளகு, திப்பிலி, பொடிசெய்த (திரிகடுகு) சூர்ணத்தில் இதைக் கலந்து சாப்பிட குரல் தொனி அதிகரிக்கும். சங்கீத வித்வான்களுக்கு வேண்டியது.

மதுவின் வகை

தென்னங்கள்:—இது பல நோய்களை உண்டாக்கும். அறிவும் கெடும், இதில் சோற்றுப்பு கட்டும். தாளகத்தைச் சுத்தி செய்யும்.

பனங்கள்:—இதிலும் பாஷாண வகைகள் சுத்தியாகும். பித்தம் அதிகரிக்கும். ஆனுல் உடல் வன்மை பெருகும். சுக்கிலம் விருத்தியாகும்.

ஈச்சங்கள்:—உடல் குளிரும். பலவித மேக ரோகங்கள் நீங்கும்; மூத்திர அடைப்பு நீங்கும்.

தேன் வகை

கப ரோகங்களுக்குச் சிறந்தது, மருத்துவத்தில் மருந்துகளுக்கு அனுபான சாதனையாகும். விக்கல், சிலேஷ்ம காசம் நீங்கும். பசி தீபனத்தை உண்டாக்கும். ஆனுல் அளவுக்குமீறி சாப்பிட வயிற்றில் அதிக துவாலையை உண்டாக்கிவிடும். தேக்கரண்டியளவு காலை மாலை சாப்பிடலாம். குரல் தொனியை அதிகரிக்கும்.

பழைய தேன் அதாவது புளித்த தேன் சாப்பிடின் பல நோய்கள் தொடரும்.

தேனும் எலுமிச்சம்பழச் சாறும் கலந்து சாப்பிடின் அதிக தூல ரோகத்தை நிவர்த்திக்கும்.

மர வகை

சந்தனம் :—சந்தனக் கட்டையை கல்லில் அரைத்து தேக்கரண்டியளவு எடுத்து சந்தன அத்தர் 2, 3 சொட்டுகள் கலந்து காலை மாலை உட்கொள்ள பெண்களுக்கு உண்டாகும் வெள்ளை, வெட்டை பிரமியம் நீங்கும். அதைப்போல் ஆண்களுக்கும் மேற்படி ரோகங்கள் விலகும். சுக்கில மேகம் தீரும். சுக்கிலத்தை விருத்தி செய்யும்.

தேவதாரு :—இதன் கட்டையை வேப்பெண்ணெயில் துவைத்து நெருப்பு பிடிக்கச் செய்து சுடர் தைலம் பிடித்து நெற்றியில் தேய்க்க, நாசியில் நசியமிட, மண்டையிடி, நாசியில் உண்டாகும் பல நோய்கள் தீரும்.

அகில் :—இதன் புகை பிடிக்க அயர்ச்சி, சளி, இருமல் நீங்கும். இதை சந்தனக்கல்லில் அரைத்து கொட்டைப் பாக்களவு விருத்தர்கள் உண்ண விருத்தர்கள் உடலை இறுக்கும்.

மருதமரம் :—நீரிழிவு என்னும் வெகு மூத்திரம், பெரும்பாடு, விடா சுரம் இவைகள் நீங்கும். இதன் பட்டையை கஷாயம் செய்து சாப்பிட வேண்டும். நெஞ்சுவலி இருதயவலி குணமாகும்.

வேங்கை :—இதனுடைய பட்டை கஷாயம் சுக்கில சுரோணிதத்தில் உண்டாகும் பிரமேக நோய்களைப் போக்கும்.

வன்னி மரம் :—இதனுடைய பட்டையில் சோற்றுப்பு கட்டும். பட்டையின் கஷாயம் சன்னி வாத சுரங்களை நீக்கும்.

புரசன் :—இதன் விதை வயிற்றுக் கிருமிகளைக் கொல்லும். இதன் பட்டையைச் சுட்டு சாம்பலாக்கி தண்ணீரில் கரைத்து, இரும்பைக் காய்ச்சி இத் தண்ணீரில் துவைக்க வெட்டையாகி உதிரும். அதை எடுத்து வல்லாரை, கரும்பு, கரிசாலை, பொற்றலை, புளியாரை முதலியவைகளின் சாறுகளால் அரைத்து கடைசியில் தேன் கூட்டி அரைத்து பழகிய மண் பாத்திரத்திலிட்டு பூமியில் புதைத்து 48 நாட்கள் கழித்து எடுத்து, தண்ணீர் சுரந்திருந்தால் வடித்துத் தள்ளி, மறுபடியும் தேனவிட்டரைத்து காலை மாலை குன்றிமணியளவு சாப்பிட தேகம் வச்சிரகாயமாகும்.

இதன் பூச்சாறை சர்க்கரை சேர்த்து சர்பத்து செய்து சாப்பிட உடல் குளிரும், கண் பிரகாசிக்கும். இதன் தையல் இலைகளால் சாப்பிட ஆயுள் பெருகும்.

மாவிலங்கு :—இதன் பட்டை குழந்தைகள் மாந்தத்தை அறுக்கும்; சன்னி சுரங்களைப் போக்கும். இதன் துளிர் இலைகளை அரைத்து மோரில் சாப்பிட இரத்த மூலம் குணமாகும்.

YOGASANAS

Translated version of Mr. E. S. Rangaswami's
A great exponent of Yagasanas
By Sri R. Meharbabu, B.Sc., M.A., B.T.

(Continued from previous issue)

HALASANA

Halasana-piough pose, Halam which is a Sanskirt term means plough, The shap of this asana resembles plough. Hence it is called Halasana.

Procedure: Lye down on the carpet, facing the sky. stretch your hands closer to the body and keep your Palms seated on the carpet. By controlling your breath raise your legs alone together to get "L" shape up to his level. Then without disturbing the position of head and by stretching apart the legs raise your pelvic girdle and bend your back front side, by stretching the legs together and place it on the carpet beyond your head. This is called Halasana or plough pose. At first it is difficult but in due course it is very easy. Of course touching the feet on the ground without bending the knees together is very difficult. They are four different positions. They are : i— When the feet rest on the ground together beyond the head, knees should be brought to the nose level.

2. Knees should be beyond the nose level and it should be brought to the fore-head position.

3. Knees should be beyond the position of fore head.


4. In addition to the position of knees beyond the fore head two palms must be kept one above the other and head is to be seated on it.

But the third position is very easy for beginners. Second position is also easy. Only after these two position it would be easy for a man to do the other two positions which are a bit difficult. To do the first position for a beginner is very difficult. Because the pelvic region should bend properly. It requires a little practise.

Let us see what are the benefits and changes in our body by doing this asana. Due to the bent shape of (hip) pelvic region, one would get slim hip in the long run. Due to the proper functioning of lungs in the chest cavity one would get broad chest. Since the posterior regions of each vertebra is pressed, spinal chord is strengthened. The muscles around hip, back of neck and thighs are reinforced. Poisonous wastes thrown from the spleen to the blood vessels and acid content etc., are taken to

(See page 14)

மார்கழித் திங்கள் வழிபாட்டு விழா !



பேராசிரியர் இராம. சுப்பிரமணியன் அவர்கள் விழாவுக்குத் தலைமை வகிக்க நிலக்கிழார் முத்துகிருஷ்ண செட்டியார் திருவிளக் கேற்றுகின்றார்.


சென்னை வண்ணையம்பதி பேரம்பாலு செட்டி தெருவிலுள்ள கோதண்டராமர் கோவிலில் 16—12—78 காலை 6 மணிக்கு, மார்கழித் திங்கள் வழிபாட்டுத் தொடக்கவிழா நடைபெற்றது,

சென்னை பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியரும், தமிழ் வளர்ச்சி மன்றச் செயலருமாகிய உயர்திரு இராம. சுப்பிரமணியனவர்கள் தலைமை வகித்து உரை நிகழ்த்தினார்கள். ஆலய அமைப்பாளர் திரு. பி. வெங்கடேசன் அவர்கள் சிறப்புரை ஆற்றினார்கள். "யோகாசனாலய விஜயம்" மாத இதழாசிரியர் புலவர் திரு. பா. ஆழ்வார் அவர்கள் அருளிசை வழங்கினார்கள்,

உயர்திரு K முத்துகிருஷ்ண செட்டியார் (நிலக்கிழார்) அவர்கள் திருவிளக்கேற்றி விழாவினைத் தொடங்கிவைத்து, ரு. 101 யோகாசன ஆலய கட்டிட நிதி வழங்கினார்கள். திருவாளர் S. முருகேசபாண்டியன் (யோ. ஆ. துணைப் பொதுச்செயலர்) வரவேற்புரையும், திருமதி S. இராஜம்மாள் (மா. தி. வ. விழாக்குழுத்தலைவர்) நன்றியும் நவின்றனர்.

தொடர்ந்து மார்கழித்திங்கள் முழுவதும் காலை 6 முதல் 7-30 மணி வரை அருளிசையும், அருளுரையும் நிகழும்.

திருமணம்



மணமகன் செல்வன் S. ராஜேந்திரன் B.Sc.,
மணமகள் செல்வி V. இந்திராதேவி

யோகாசன ஆலய சுற்றுலா குழுவின் செயலர் திரு. S. வைரவ நாடார், மகளிர் இசைப் பிரிவு செயலர் திருமதி V. காளீஸ்வரி ஆகிய தம்பதிகளின் செல்வ மகள் திருவளர் செல்வி V. இந்திராதேவியின் திருமணம் 10—12—78 ஞாயிற்றுக்கிழமை காலை 7-30 மணிக்கு நடைபெற்றது.

சென்னை வண்ணையம்பதி மணலி சின்னையா முதலி தோட்டம் 2-வது தெருவிலுள்ள அருள்மிகு துர்காலட்சுமி திருமண மண்டபத்தில் நடைபெற்ற இம் மண விழாவுக்கு, யோகாசன ஆலய தலைவர் உயர்திரு கோ. மு. சுவாமி அவர்கள் தலைமை தாங்கி வேத விதிப்படி வேள்வி வளர்த்து சடங்குகள் செய்தனர்.

---

the kidneys. There with the help of malphigean tibules these unwanted poisonous wastes are seperated along with excess of water present in blood. In this way urine is separated from blood and it is purified.

Nervous disorder, sleeplessness, joint pains, backache, dull eyes, musculer pains etc., will be completely made nowhere.

In the case of Pachchimothasana we seat our legs on the carpet in the sitting posture. We bend our body front and keep on the knees. Where as in Halasana, head and hands are seated properly and the knees are placed beyond the fore head by bending our body from front to back, Stomach, liver, spleen, pancreas, intestines etc., of the abdominal organs are pressed almost similar in both these cases. So it is clear that Halasana also carries all the benefit of Pachchimothasana too.

Take a few minutes rest and then do Mayurasana.

மணமகன் திருவளர் செல்வன் S. ராஜேந்திரன் B.Sc., (மீன்துறை இயக்குநர் அலுவலகம், சென்னை) அவர்கள், மணமகள் திருவளர் செல்வி இந்திராதேவிக்குத் திருமாங்கல்யம் சூட்டிக் கைத்தலம் பற்றி இல்வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக்கொண்டு மாலை மாற்றிக் கொண்டனர். விழா தலைவர் அவர்கள் ஒவ்வொரு சடங்கு செய்யும்போதும் மணமக்களுக்கு அதன் உண்மை விளக்கங்களை எடுத்து மொழிந்தார்கள். உறவினரும் நண்பர்களும் வாழ்த்தினர்.

வாழ்த்துரை வழங்கும் நிகழ்ச்சிக்கு யோகாசன ஆலய அமைப்பாளர் திரு. பி. வெங்கடேசன் தலைமை வகித்தனர். புலவர் திரு. பா. ஆழ்வார், திருமதி வசுந்தரா முருகேச பாண்டியன் B.E., திருவாளர்கள் N. குருலிங்கம், V. நரசிம்மலு, இராசம்மாள் நரசிம்மலு ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். சிவகாசி அருணகிரிநாதர் சபையைச் சார்ந்த திருமதிகள் சஞ்சீவித்தாய், தேனம்மாள் ஆகியோர் வாழ்த்துப்பா பாடினர். திருமதி ஞானம் காசிராஜன் யோ. ஆ. மகளிர் பிரிவின் சார்பாக பிரார்த்தனைப் படம் அன்பளிப்பு வழங்கினர். வண்ணை கோதண்டராமர் கோவில் கிளை சார்பாக செல்வன் R. இராஜேந்திரன் யோ. ஆ. வாழ்த்து மடல் வாசித்தளித்தார். மற்றும் பலரும் அன்பளிப்பு வழங்கினர், மணமகளின் தந்தையார் திரு. S. வைரவ நாடார் நன்றி கூறினர். யோ. ஆ. மகளிர் பிரிவு செயலர் செல்வி R. சாந்தி B.Sc., பிரார்த்தனை பாட விருந்தோம்பலுடன் விழா இனிது நிறைவேறியது. திருமண நினைவாக யோ. ஆலய விஜய வளர்ச்சிக்கு ரூ. 200/- நன்கொடை வழங்கப்பட்டது,

ஏழாயிரம்பண்ணை நிகழ்ச்சி!

இராமநாதபுர மாவட்டம் சாத்தூரையடுத்துள்ள ஏழாயிரம் பண்ணை என்னும் ஊருக்கு 12—11—78-ல் யோகாசன ஆலயத் தலைவர் உயர்திரு கோ, மு. சுவாமி அவர்கள் விஜயம் செய்தார்கள். சென்னையிலிருந்தும், விருதுநகரிலிருந்தும் யோ, ஆ. அன்பர்கள் உடன் வந்தனர். திருமதி வள்ளியம்மாள் இல்லத்தில் சுவாமிகளை வரவேற்றனர். இரவு 6-30 மணிக்கு அருள்மிகு காளியம்மன் கோவிலில் சிறப்புக் கூட்டம் அமைக்கப்பட்டது,

ஏழாயிரம் பண்ணை நாடார் மகமை உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர் உயர்திரு சூரி, சுப்பு, வேங்கடரமணன் அவர்கள் தலைமை வகித்தனர். புலவர் திரு. பா. ஆழ்வார் அருளிசை வழங்கினர். திருமதி K, மகமாயம்மையார் "அடியார் உறவு" எனும் தலைப்பில் உரை நிகழ்த்தினர்கள், அதையடுத்து சுவாமியவர்கள் வேதாந்த சித்தாந்தக் கருத்துக்களுடன் பேருரையாற்றினர்கள். கூட்டத் தலைவரவர்கள் முடிவுரையில், யோகாசன ஆலயம் தொடர்ந்து இவ்வூரில் சேவைபுரிந்தால் மக்கள் பெரும்பயன் துய்ப்பார்கள் என்று வேண்டுகோள் விடுத்தனர். திருவாளர் D. சங்கரேஸ்வரன் நன்றி கூறினர்.

விருதுநகர் நிகழ்ச்சிகள்!

13—11—78 பிற்பகல் 3-30 மணிக்குத் திருமதி K. மகமாயம்மையார் (விருதை மகளிர் பிரிவு செயலர்) இல்லத்தில் புலவர் திரு. பா. ஆழ்வார் அவர்களின் இசை நிகழ்ச்சி நிகழ்ந்தது. உயர்திரு சுவாமியவர்கள் 13—11—78 முதல் ஒருவாரம் விருதுநகரில் தங்கி

அன்பர்களுக்கு வேதாந்தப் பாடம் நிகழ்த்தியதோடு, 19—11—78 இரவு ஸ்ரீ காமராஜ் நினைவு இல்லத்தில் வேதாந்த விரிவுரையும் ஆற்றினார்கள்.

29—11—78 காலை 10 மணிக்கு இராமமூர்த்தி வீதி, 203, யோகாசன ஆலயத்தில், திரு. S முருகேச பாண்டியன் B.E., அவர்கள் "ஆஸ்திகம்" எனும் பொருளில் உரையாற்றினார், இரவு 6 மணிக்குத் திருமதி வசுந்தரதேவி தாயுமானர் பாடலுக்கு உரை நிகழ்த்தினார்கள்.

செங்கல்பட்டில் சுவாமிகள் நிகழ்ச்சி

செங்கை, பெரிய ரத்தினத் தெரு, எண் 3, இல்லத்தில் 1—12—78 வெள்ளிக்கிழமை காலை 10 முதல் 12 மணி வரையில் யோகாசன ஆலயத் தலைவர் உயர்திரு கோ. மு. சுவாமி அவர்கள் வேதாந்த விசாரணை பாடம் நிகழ்த்தினார்கள். பிற்பகல் 3 முதல் 4-45 வரை சொற்பொழிவும். 2—12—78 காலை 10-30 முதல் 12 வரை வேதாந்த பாடமும் நிகழ்த்தினார்கள். இரவு 6-30 முதல் 8-15 வரை சின்னநத்தம் சுந்தரவினாயகர் கோவிலில் "ஐவகை எனும் பூத மாதியை" என்ற தாயுமானர் பாடலுக்கு விளக்கவுரையாற்றினார்கள். 3—12—78 காலை 10 முதல் 11-30 மணி வரை சின்னமணியக் காரத் தெரு, எண் 23 இல்லத்தில் "ஐந்துவகையாகின்ற 'பூதமுதல்" என்ற பாடலுக்கு வேதாந்த சித்தாந்தக் கருத்துக்கள் வழங்கினார்கள்.

அநுதாபச் செய்தி !

யோகாசன ஆலய தட்சிணாமூர்த்தி கோவில் கிளை, மன்னார்சாமி கோவில் கிளைகளில் செயலாளராகப் பணிபுரிந்த புலவர் திரு. K. முருகேசனார் 22—11—78 புதன்கிழமை இரவு 9-45 மணிக்குச் சென்னை இராயபுரம், தொப்பை முதலி தெரு, எண் 82 இல்லத்தில் பூத உடலை விடுத்தனர். யோகாசன ஆலய தலைவர் உயர்திரு கோ. மு. சுவாமி அவர்களும் ஆலய அங்கத்தினர்களும் இறுதி வணக்கம் செலுத்தினர். 23—11—78 மாலை 5 மணிக்கு இறுதி ஊர்வலம் மூல கொத்தளம் மயானபூமி அடைந்தது. உயர்திரு சுவாமி அவர்கள் தலைமையில் இரங்கற் கூட்டம் நடைபெற்றது. யோ, ஆலய அன்பர்கள், புலவரவர்களின் உறவினர், நண்பர்கள் பலரும் மறைந்த பெரியாரின் நற்பண்புகளையும் சேவைகளையும் எடுத்து மொழிந்து உருக்கமான உரை நிகழ்த்தினர். சுவாமி அவர்கள் வேத மந்திரங்கள் ஓதிய பின்னர் உடல் அடக்கம் செய்யப்பட்டது.

7—12—78 அன்று நீத்தார் துயர் துடைப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இரவு 7 மணியளவில் யோ. ஆ அமைப்பாளர் திரு. பி. வெங்கடேசன் அவர்கள் தலைமையில், புலவர் பா. ஆழ்வார் அவர்களால் "திருநீலகண்ட நாயனார்" இசைக் கதை நிகழ்ச்சி நடைபெற்றது.

புலவரவர்களின் இழப்பை ஈடுசெய்ய இயலாது வருந்தும் குடும்பத்தினர்க்கு ஆழ்ந்த அநுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

—ஆசிரியர்.

அறிவிப்பு!

"யோகாசன ஆலய விஜயம்'

சந்தாதாரர்க்கு

பேரன்புடையீர் !

அச்சகச் செலவை ஈடு செய்ய இயலாமையினல், 1979 ஜனவரி மாதம் முதற் கொண்டு பின் வருமாறு சந்தா உயர்த்தப் பட்டுள்ளது;

தனி இதழ் 50 காசு

ஆண்டு சந்தா ரூ 5

(ஆயுட் சந்தா வழக்கம் போல் ரூ 50 மட்டுமே)

எப்போதும் போல அன்பர்கள் பேராதரவு தந்து சந்தாவைப் புதுப்பித்தும் புதிய சந்தாதாரர்களைச் சேர்த்தும் இறைபணியில் ஈடுபடுவீர்களாக!

M. O. அனுப்ப வேண்டிய முகவரி :

அருண்குமார் N. படேல், (வெளியிடுபவர்)
'' யோகாசன ஆலய விஜயம் ''
462, T. H. ரோடு, சென்னை-600 021,

S. கண்ணப்பன், மேனேஜர்.

Published by Sri Arun Kumar N. Patel, 462, T. H. Road, Old Washermenpet, Madras-600021. Editor Pulavar Sri B. Alwar, 464, T. H. Road, Old Washermenpet, Madras-600021. Printed by Sri C. M. Sivaraman, at T. G. Sambandam & Co., Counian Press, 169, (41) Broadway, Madras-600 001. (December-1978)